BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) இப்போது வரவேற்கிறது மற்றும் புதுமை படைக்கும் புதிய தலைமுறைக்கு சக்தியூட்டுகிறது.

ப்ராம்ப்ட்டன், ON (மே 21, 2021) – நேற்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) எனும் மெய்நிகர் நிகழ்வுக்கு உபசரிப்பு செய்தது; பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) எனும் இந்த நிகழ்வானது ப்ராம்ப்ட்டன் நகரின் புதுமை படைக்கும் மாவட்டத்தில் சர்வதேச தொழில்முனைவோர் எளிதில் வந்திறங்குவதற்கான தளமாகும்

பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) எனும் இந்த முனைப்பிற்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஊக்கம் கொடுக்கிறது; இது அடுத்த தலைமுறையினருக்கு ஆற்றல் ஊட்டுவதற்கான ஒரு இலக்கு கொண்டிருக்கிறது; அவர்களின் தொழில் பயணத்தின் வேகத்தை முடுக்கிவிடவும், அவர்களுக்கும் 'நம்மால் முடியும் ' எனும் எண்ணத்தை வேரூன்ற வைப்பதற்கும், பொருளாதாரம் மற்றும் சமூகத்தை உயர்த்துவதற்கும் குறிக்கோள் கொண்டுள்ளது. டோரோன்ட்டோ தொழில் மேம்பாட்டு மையத்துடன் (Toronto Business Development Centre) கூட்டு வைத்து நிறுவப்பட்ட இந்த பீஹைவ் ப்ராம்ப்ட்டன் (BHive Brampton) எனும் முனைப்பானது, கனடா நாட்டில் ஸ்டார்ட்-அப்-விஸா (Start-up Visa) மூலமாக உயர்ச்சி பெறக்கூடிய தொழில்களை நிறுவ விரும்புகின்ற அயல்நாட்டு தொழில்முனைவோரை ஈர்ப்பதற்கான உத்தேசம் கொண்டதாகும். வெற்றியடையும் விண்ணப்பதாரர்களுக்கு நிரந்தர குடியிருப்புதாரர் உரிமை வழங்கப்பட்டு, அவர்களின் ஆரம்ப கட்ட 6 மாத காலத்தில் அலுவலகத்திற்கான ஒரு இடம், இணையதள இணைப்பு வசதிகள் மற்றும் இதர தொழில்ரீதியான ஆதரவுக்கான சேவைகளும் வழங்கப்படும். தொழில் முனைய விரும்புவோர் இங்கு விண்ணப்பிக்கலாம்

நகரின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் இடைவிடாத பரிணாம வளர்ச்சியானது அதன் பொருளாதார மீட்புக்கான யுக்தியின் (Economic Recovery Strategy), ஒரு அங்கமாகும் மற்றும் கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கங்களில் இருந்து விடுபட்டு நகரை முன்னோக்கி செலுத்த உதவும். இந்த பீஹைவ் (BHive) ஆனது, ப்ராம்ப்ட்டன் புதுமை படைக்கும் மாவட்டத்தில் தொழில்முனையக்கூடிய, ஆரம்பகட்ட முடுக்கிவிடப்படக்கூடிய தொழில்களை இணைக்கிறது; அவற்றில், ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் ( Brampton Entrepreneur Centre), ரையர்ஸன் வழிநடத்துகின்ற புதுமை படைக்கும் மண்டலம் (Ryerson-led Innovation Zone), ஆராய்ச்சியில் புதுமை படைத்து வணிகமயமாக்கும் மையம் ( Research Innovation Commercialization (RIC) Centre), ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் (the Founder Institute), சைபர் செக்யூரிட்டி ஆக்சிலரேட்டர் ( Cyber Security Accelerator), ரோஜர்ஸ் சைபர்க்யூர் கேட்டலிஸ்ட் (Rogers Cyberecure Catalyst) இனால் வழி

நடத்தப்படுகின்ற கேட்டலிஸ்ட் சைபர் ரேஞ்ச்(Catalyst Cyber Range), மற்றும் ரையர்ஸன்ஸ் டி எம் இஸட் (Ryerson's DMZ) ஆகியவை அடங்கும். ப்ராம்ப்ட்டனின் வர்த்தக வாரியம் (Brampton Board of Trade) மற்றும் டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் (Downtown Brampton BIA) ஆகியோரும் கூட, புதுமை படைக்கும் மாவட்டத்தின் முக்கிய பங்காளிகள் ஆவார்கள்.

பீஹைவ் (BHive) பற்றி இங்கு மேலும் அறியலாம். நகரின் புதுமைபடைக்கும் மாவட்டம் பற்றி இங்கு அறியலாம்.

**அற்ஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளுக்கான ஒரு நகரமாகும், நாங்கள் பீஹைவ் (BHive) ஐத் தொடங்கும்போது, தொழில்முனைவோர் தங்கள் நிறுவனங்கள் மற்றும் தயாரிப்புகளுக்கு உருக் கொடுக்கவும், திறமை கொண்ட பணியாட்களை பணியமர்த்தவும், மூலதனத்தை திரட்டவும், தங்கள் நிறுவனத்தை உயர்த்துவதற்கான ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்தவும், எங்கள் புதுமை படைக்கும் மாவட்டத்தை விட்டு வெளியேறாமல் இருக்கும் வகையில் உருவாக்கினோம். ப்ராம்ப்ட்டன் நகரமானது, உண்மையிலேயே புதுமை படைப்பதில் முன்னோடியாக, மாறுவதற்கான பாதையில் உள்ளது. BHive மற்றும் எங்கள் புதுமை படைக்கும் மாவட்டத்தில் தொழில் முனைவோர் தங்களின் துவக்கத்தைப் பெற்று சிறந்த வெற்றிக் கதைகள் உருவாவதைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறேன். "

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரமானது, புதுமை படைப்பதில் ஒரு அணித்தலைவராக ஆவதற்கான பாதையில் சென்று எதிர்காலத்திற்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வருகிறது. எங்கள் விரிவடைந்துவரும் புதுமை படைக்கும் மாவட்டத்திற்கு பீஹைவ் ( BHive) -ஐ வரவேற்பதன் மூலம், ஒரு தொழில் தொடங்கும் ஒரு சமூகத்தை வளர்ப்பதற்கும், உள்ளூர் திறமைகளை வளர்ப்பதற்கும், தொழில்முனைவோரின் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் எங்கள் ஆற்றலை வலுப்படுத்துகிறோம். எங்கள் சமூகத்திற்கு புதிய தொழில்களை வரவேற்கவும், அவை செழித்து வளர்வதையும் நாங்கள் எதிர்நோக்குகிறோம். "

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"பிராம்ப்டனின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியானது, எங்கள் பொருளாதார மீட்பு மூலோபாயத்திற்கான முக்கிய பகுதியாகும், மற்றும் கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு முன்னேற உதவும். புதுமை படைத்தல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவை, அந்த பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பீஹைவ்

(BHive) அடுத்த தலைமுறை புதுமை படைப்பாளர்களுக்கு அதிகாரம் அளிப்பதால், இது பொருளாதாரம் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் சாதகமான தாக்கத்தை உருவாக்கும். ”

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1&5; துணைத்தலைவர், பொருளாதார மேம்பாடு மற்றும் கலாச்சாரத் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டனின் வளர்ந்து வரும் புதுமைபடைக்கும் சுற்றுச்சூழல் அமைப்பானது, ஒரு புதுமை படைக்கும் மாவட்டத்தை உருவாக்குவதற்கான எங்கள் ஊழியர்களின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது, மற்றும் இது சிறந்த கூட்டாளிகளை இந்தப் பட்டியலில் சேர்க்கிறது. பீஹைவ் ( BHive) ஐ அறிமுகப்படுத்தியதன் மூலம், டொரொன்ட்டோ வணிக மேம்பாட்டு மையத்தின் (Toronto Business Development Centre ) கூடுதல் நிபுணத்துவத்தை எங்கள் புதுமை படைக்கும் மாவட்டத்திற்கு கொண்டு வருகிறோம், மேலும் ஒவ்வொரு தொழிற்துறையிலும் ஒத்துழைப்பு, கூட்டாண்மை மற்றும் புதுமைகளுக்கு இன்னும் பல வாய்ப்புகளை வழங்குகிறோம். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டனின் புதிதாக தொடங்கப்பட்ட புதுமை படைக்கும் மாவட்டத்தின் ஒரு பகுதியாக நாங்கள் இருப்பதில் பெருமிதம் கொள்கிறோம், இது பிராந்தியத்தின் சிறந்த கல்வி நிறுவனங்கள் மற்றும் முன்னோக்கிச் சிந்திக்கும் சமூகத் தலைவர்களுடன் சேர்ந்துஒரு தொழில்முனைவோருக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது. பீஹைவ்(BHive) என்பது, அனுபவம் வாய்ந்த புதிதாக வருகின்ற தொழில்முனைவோரை அழைத்து வந்து அவர்களுக்கு நிலம் அளித்து மற்றும் விரிவாக்கம் செய்யவும் உதவுகிறது. புதுமை படைக்கும் வகையிலான தொழில்முனைவோருக்கு செய்யப்படும் எங்கள் முதலீடுகள், எதிர்கால தொழில்களுக்கும் கனடாவில் புதுமைபடைக்கின்ற சுற்றுச்சூழல் அமைப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பயனளிக்கும். ”

- *விக்ரம் குரானா, தலைமை செயல் அதிகாரி, ப்ராம்ப்ட்டன் பீஹைவ் (BHive).*

"ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கிய அம்சமானது, குறுக்கு மகரந்தச் சேர்க்கை போன்றது, மற்றும் மாறுபட்ட பின்னணியையும் நிபுணத்துவத்தையும் கொண்ட மக்களை ஒன்றிணைப்பதன் மூலம், நாங்கள் பீஹைவ் (BHive) ஐ மட்டுமல்ல, புதுமை படைக்கும் சுற்றுச்சூழல் அமைப்பையும் வளர்த்துக் கொள்கிறோம். புதிய- தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த திட்ட செயலாக்கங்களை வழங்குவதில் TBDC இன் நிபுணத்துவத்துடன் இணைந்து, புதிதாக வருகை தரும் தொழில்முனைவோர் தங்கள் அனுபவத்தை கொண்டு வருவதற்கும் BHive ஐ ஆதரிப்பதையும் நாங்கள் எதிர்நோக்குகிறோம்; இது அவரவர் பிராந்தியத்திலும் ஒட்டுமொத்த கனடாவிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கி, புதுமை படைப்புகள் கொண்ட சிறந்த எதிர்காலத்தை உருவாக்க ஆதரவளிக்கும் . ”

*- ஸோபி ரகுநாதன், வாரிய உறுப்பினர், டோரோன்ட்டோ வர்த்தக வளர்ச்சி மையம், முதுநிலை கம்ப்ளயன்ஸ் பார்ட்னர், 4S கன்ஸல்ட்டிங் சர்வீசஸ் இன்க்.*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca